**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.44/19**
**வழக்கு சாட்சி – அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜாராம் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.23

**( 1ம் எதிரி ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 2 முதல் 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கெப்புரங்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது உள்ள கையெழுத்து என்னுடையது தான். 15.7.16 அன்று தோட்டத்தில் வைத்து சம்பவம் தொடர்பாக சார்பு ஆய்வாளரிடம் கையெழுத்துபோட்டுக்கொடுத்தேன். நான் மட்டும் தான் கையெழுத்து போட்டேன். பார்வைமகஜரில் உள்ள 1வது உள்ள கையெழுத்து மட்டும் அசாஆ1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் ரெங்கசாமி எனது தகப்பனார் ஆவார். மேற்படி கையெழுத்தை சந்திரன் வீட்டிற்கு அருகில் வைத்து போட்டுக்கொடுத்தேன். ஒரு கையெழுத்து தான் போட்டுக்கொடுத்தேன். நான் கையெழுத்து போடும் போது மதியம் 3மணி இருக்கும். சண்டை நடந்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் நேரில் பார்த்தேன். யார் யாருக்கு இடையில் சண்டை நடந்தது என்றால் எனது அப்பா , பாண்டி, தனலட்சுமி, பாண்டீஷ்வரி ஆகியோர் இருந்தார்கள். சம்பவதன்று மேற்படி பாண்டீஸ்வரி அங்கு இருந்தார்,. சண்டையை நான் விலக்கவிடவில்லை. நான் வரும் போது சண்டை முடிந்துவிட்டது. சண்டை எந்த தேதியில் நடந்தது என்றால் 15.7.16ம் தேதி நடந்தது. அப்போது மணி 3 இருக்கும். சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். நான் காவல்நிலையத்திற்கு உடன் செல்லவில்லை. எவ்வளவு நேரம் கழித்து புகார் கொடுத்தோம் என்றால் அரைமணி நேரம் இருக்கும். புகார் கொடுத்தவுடன் போலிசார் வந்துவிட்டார்கள். போலிசார் 3 மணிக்கு வந்தார்கள். காவல்நிலையத்திற்கு நான் செல்லவில்லை. போலிசார் என்னை தோட்டத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும் போது 4 நபர்கள் இருந்தார்கள். என்னிடம் மட்டும் தான் கையெழுத்து வாங்கினார்கள். பாண்டிக்கும் என் அப்பாவிற்கும் சர்வேஎண்.338/7 ல் பிரச்சனையா 338/6ல் பிரச்சனையா என்றால் சர்வேஎண்.338/7ல் பிரச்சனை. சர்வேஎண்.338/7ல் பிரச்சனை நடந்தது என்ற விபரத்தை போலிசாரிடம் நான் கூறவில்லை. வரைந்து வைத்த படத்தில் நான் கையெழுத்து செய்தேன். நான் எனது தகப்பனாருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்பதால் எனது சாட்சியம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை பொறுத்த வரை அக்கறை சாட்சி என்பதால் என்னுடைய சாட்சி சொல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.